**நிறைவேற்று மனு எண்.05/2025 இன் அசல் வழக்கு எண் : 156 /2015**

நாள்: 02.06.2026

ம.சா.1– பங்கஜம், க/பெ.சிவசங்கரன்

மனுதாரர் மற்றும் அவரின் வழக்கறிஞர் ஆஜர், எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களின் வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1ன் குறுக்கு விசாரணை:

1. நான் தாக்கல் செய்துள்ள இம்மனுவுடன் அசல் வழக்கின் தீர்ப்புரையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு இருதரப்பு முழுவிசாரணைக்கு பின்னர் ஏற்பட்டதல்ல என்றால் அவர்கள் வரவில்லை. இப்பொழுது அசல் வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பானது ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றாலும், அசல் வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பானது ரத்து செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நான் சாட்சியம் அளிக்கவில்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 2ல் " நான் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் தீர்ப்பாணை பெற்ற விவரம் எதிர்மனுதாரர்களுக்கு நன்கு தெரியும்." என கூறியுள்ளேன் என்றால் சரிதான். எப்பொழுது எவ்வகையில் மேற்படி தீர்ப்பு குறித்த விவரமானது எதிர்மனுதாரர்களுக்கு தெரியும் என்றால் கடந்த 04.03.2025 அன்று நாங்கள் விவசாய நிலத்தில் பண்ணையம் செய்து கொண்டு இருந்தபோது எதிர்மனுதாரர்கள் கூலிஆட்களை அழைத்து வந்து எங்களை தடுத்தனர். அப்பொழுது அவர்களுக்கு தெரியும்.

3. நான் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் 04.03.2025 அன்று எதிர்மனுதாரர்கள் கூலிஆட்களுடன் வந்து தடுத்ததாக கூறியுள்ளேனா என்றால் அவர்கள் கூலி ஆட்களா அல்லது அடியாட்களா என்று எனக்கு தெரியாது. 04.03.2025ம் தேதி எதிர்மனுதாரர்களும், மற்றவர்களும் நான் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல யாரும் தடை செய்யவில்லை என்பதால் தான் என்னால் தெளிவாக கூற இயலவில்லை என்றால்

ஒருமுறை அல்ல, தீர்ப்பு கிடைக்கபெற்ற தினத்தில் இருந்து எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்து வந்தார்கள். நான் தீர்ப்பு பெற்ற நாள் முதல் தினம் தினம் எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்ததாக மனுவில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

4. நான் கூறுவது போல் எதிர்மனுதாரர்கள் தினமும் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், அதனை நான் என் மனுவிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 04.03.2025ம் தேதியில் அத்துமீறி உள்ளே நுழைந்து அக்கிரமபிரவேசமும், அழிம்பும் செய்தார்கள் என நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன், ஆனால் யார் வந்து 04.03.2025 அன்று அத்துமீறி உள்ளே நுழைந்து அக்கிரமபிரவேசமும், அழிம்பும் செய்தார்கள் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன். நான் 04.03.2025 அன்று வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர்கள் அழிம்பும், அக்கிரமபிரவேசமும் செய்தார்கள் என்று எனது மனுவிலும், முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல.

5. 04.03.2025ம் தேதி எவ்வகையான அக்கிரமபிரவேசம் மற்றும் எவ்வகையான அழிம்பு செய்யப்பட்டது என்றும் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் மகாபாரதம் தான் எழுதவேண்டும். 04.03.2025 அன்று எனது கையில் வழக்கின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் வைத்திருந்தேனா என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லை, எனது கணவர் தான் இருந்தார். 04.03.2025 அன்று நான் எனது வீட்டில் இருந்தேனா அல்லது சென்னையில் இருந்தேனா என்றால் வீட்டில் தான் இருந்தேன். 04.03.2025ம் தேதி எந்த நேரத்தில், எந்த இடத்தில் அக்கிரமும், அழிம்பும் நடந்தது என்ற விவரத்தை நான் எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஒருமுறையா செய்தார்கள் நான் சொல்வதற்கு.

6. 04.03.2025ம் தேதி நடந்ததாக சொல்லும் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் நான் போகவில்லை. நான் அங்கு 04.03.2025 அன்று சம்பவ இடத்தில் இல்லாத காரணத்தினால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல்துறையில் புகார் மனு அளிப்பதற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். நான் கொடுத்த புகாரின் மீது எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் வழக்கு பதிவு செய்யப்பட்டது, ஆனால் இது உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை நாடுமாறு

காவல்துறையில் தெரிவிக்கப்பட்டது. நான் காவல்நிலையத்தில் அளித்த புகார் மனுவின் நகலையோ அல்லது எதிர்மனுதாரர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கின் விவரத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 04.03.2025ம் மனுவில் கண்டவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அதுதொடர்பாக நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர்களின் வண்படிப்பாதை அனுபவத்தை தடை செய்யும் நோக்கத்துடன் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக பெறப்பட்ட தீர்ப்பாணையை மட்டும் அடிப்படையாக கொண்டு எதிர்மனுதார்கள் மீது பொய்யான சங்கதிகள்உடன் மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிர்மனுதாரர்கள் கனம் நீதிமன்ற உத்தரவு மற்றும் தீர்ப்பு, தீர்ப்பாணையை மனுவில் கண்டவாறு எக்காலத்திலும் அவமதிக்கவில்லை என்றாலும் சரியல்ல. மனு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**சாட்சியானவர் மறு விசாரணை செய்யப்படவில்லை.**

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2026.06.02 13:30:27 +0530